## செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின்
## நிதிநல்கை பெற்று
## புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
## நிகழ்த்தும்

# தொல்காப்பிய எழுத்து, சொல் இலக்கண மரபும் சங்க இலக்கியமும்

## பயிலரங்க நிறைவு விழா

## செய்திக் குறிப்பு

புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் சென்னையிலுள்ள செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி உதவி பெற்று டிசம்பர் 12 முதல் 23 முடிய பத்து நாட்கள் "தொல்காப்பிய எழுத்து, சொல் இலக்கண மரபும் சங்க இலக்கியமும்" எனும் தலைப்பில் ஆராய்ச்சி மாணவர்களுக்காகப் பயிலரங்கு நடத்தியது. இதில் மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி, காஞ்சிமாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம், புதுவைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, புதுடில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த நாற்பது மாணவர்கள் பங்கேற்றனர். இவர்களுக்கு பல்வேறு பல்கலைக்கழகங்களிலிருந்தும் ஆய்வு நிறுவனங்களிலிருந்தும் வந்த பேராசிரியர்கள் 21 பேர் வகுப்பு எடுத்தனர்.

இப்பயிற்சியின் நிறைவுவிழா 23.12.11 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு காஞ்சிமாமுனிவர் பட்டமேற்படிப்பு மைய தமிழ்த்துறை கருத்தரங்க அறையில் நடைபெறுகிறது. கலைப் பண்பாட்டுத் துறை சிறப்புச்செயலரும் புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத் துணைத் தலைவருமான ஜி. ராகேஷ் சந்திரா இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் புதுச்சேரி முதலமைச்சர் திரு. ந. ரங்கசாமி அவர்கள் பயிற்சிபெற்றவர்களுக்குச் சான்றிதழையும் நூல்களையும் வழங்கிச் சிறப்புரையாற்றுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. வைத்தியநாதன் அவர்கள் வாழ்த்துரை வழங்கவும் புதுதில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக இந்திய மொழிகள் மையத் தலைவர் பேராசிரியர் கி. நாச்சிமுத்து அவர்கள் பயிலரங்க நிறைவுரை வழங்கவும் உள்ளார்கள். நிறுவன இயக்குநர் முனைவர் பக்தவத்சல பாரதி வரவேற்புரை ஆற்றவும் ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. இரவிசங்கர் நன்றியுரை ஆற்றவும் உள்ளார்கள்.